**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**
**THIRUVIDAIMARUTHUR.**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : PW-3 | Date | : 12.12.2024 |
| Case No. | : **O.S. 399/2019** | Nationality | : Indian |
| Name | : சூசைஅற்புதமேரி | Religion | : |
| Father's/Husband's Name | : ஆரோக்கியசாமி | Age | : 63 |
| Village | : | | |
| Taluk | : | | |

<u>வா.சா.3</u>

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**1, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் சொத்து வேண்டும் என்று கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். நிரூபண வாக்குமூலத்திற்கு யார் விவரம் சொன்னது என்றால் நான்தான் வழக்கறிஞரிடம் விவரம் கூறினேன். வாதி எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது சித்தப்பா பேரன் ஆவார். எனக்கு எத்தனை நபர்கள் வாரிசுகள் என்றால் 3 பேர் வாரிசுகள் ஆவார்கள். ஆரித்மேரி, சௌரிநாயகம், பெல்ஸ்ரோஜா ஆகியோர் வாரிசுகள் ஆவார்கள். ஆரித்மேரியின் கணவர் பெயர் என்னவென்றால் ராபர்ட்சந்தானம் ஆகும். வழக்கு சொத்து வாதிக்கு சொந்தமானது என்பதற்கான மூல ஆவணங்கள் எதுவும் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. தேவசகாயம்பிள்ளை என்பவருக்கு 2 மனைவிகள் என்றால் சரியல்ல. ஒரே மனைவிதான். தேவசகாயம்பிள்ளை எப்போது இறந்தார் என்றால் தெரியவில்லை. தெய்வநாயகம் யாருடைய வாரிசு என்றால் வாதியின் வாரிசு ஆவார். தெய்வநாயகத்திற்கு செல்வநாயகம், சவரிமுத்து, சாமிதுரை ஆகியோர்தான் வாரிசுகள் என்பதற்கு நான் வாரிசு சான்றிதழ் மற்றும்

வேறு எதாவது ஆவணங்கள் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. அவர்கள்தான் வாரிசுகள். செல்வநாயகம் எந்த தேதியில் இறந்தார் என்பது தெரியுமா என்றால் தெரியாது. தேவராஜ் எந்த தேதியில் இறந்தார் என்பது தெரியுமா என்றால் தெரியாது.

2. சந்தானம் எப்போது இறந்தார் என்று தெரியுமா என்றால் அவர் இறந்து சுமார் 40 வருடங்கள் இருக்கும். சந்தானத்திற்கு தேவசகாயம் என்ன உறவுமுறை என்றால் சந்தானத்தின் தாத்தா ஆவார். எனக்கு திருமணம் ஆகி எத்தனை ஆண்டுகள் ஆகிறது என்றால் எனக்கு 1985 ம் ஆண்டு திருமணம் நடந்தது. அந்தோணிசாமி, சந்தானம் ஆகியோர் மலேசியாவில் பிறந்தார்கள் என்றால் சரியல்ல. இந்தியாவில் பிறந்தார்கள். சந்தானம் மலேசியா குடியுரிமை பெற்றவர் என்றால் சரிதான். அவர் அவ்வப்போது இந்தியா வந்து செல்வார். சந்தானம் மலேசியாவில் இறந்துவிட்டார் என்றால் சரிதான். சந்தானத்தின் வாரிசுகள் அனைவரும் இவ்வழக்கில் தரப்பினர்களாக உள்ளார்களா என்றால் இறந்துபோன நபர்களை தவிர மற்ற 5 வாரிசுகளும் தரப்பினர்களாக உள்ளார்கள்.

3. அன்னம்மாள் செல்வநாயகத்தின் வாரிசு என்பதற்கு நான் ஆவணங்கள் எதுவும் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. ஆனால் அவர் செல்வநாயகத்தின் மகள் ஆவார். எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ள கோவிலில் அன்னதானம் எந்த தேதியில் செய்வார்கள் என்றால் ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி மாதம் 11 ம் தேதி அன்னதானம் செய்வார்கள். அவ்வாறு அன்னதானம் செய்வார்கள் என்பது குறித்து தேவாலயத்தில் உள்ள பாதிரியாரை அழைத்து விசாரித்தால் தெரிய வரும் என்றால் அவர்கள் அவ்வப்போது மாறி சென்று விடுவார்கள். அவ்வாறு அன்னதானம் நிகழ்ச்சி நடைபெறுவதற்கு பத்திரிக்கை எதுவும் பார்த்துள்ளேனா என்றால் இல்லை நான் 10 வயதாக இருக்கும்போது கோவிலுக்கு சென்று அன்னதானம் சாப்பிட்டுள்ளேன். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள மாதா கோவிலில் அன்னதானம் நடைபெறவில்லை என்றாலும் நான்

வாதிக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள வாரிசு விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. வாதி மலேசியாவில் பிறந்தவர் என்றால் சரிதான். அவரும் அவ்வப்போது இந்தியா வந்து செல்வார். வாதி எனக்கு உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**4 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. ஆரோக்கியசாமி எனது கணவர் என்றால் சரிதான். அவர் நீதிமன்றத்திற்கு வந்துள்ளாரா என்றால் வந்துள்ளார். அவர்தான் இவ்வழக்கை பொது அதிகார முகவர் என்ற முறையில் நடத்தி வருகிறார் என்றால் சரிதான். வாதி தேவசகாயம் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால் சரிதான். இவ்வழக்கில் நான் என் கணவருக்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்காக சாட்சியம் அளிக்கிறேன். எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருநது அழைப்பாணை வந்ததா என்றால் வந்தது. வாசா2 ஆரித்மேரி எனது மகள் என்றால் சரிதான். அவர் என்ன சாட்சியம் அளித்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியாது. வாதி எதற்காக வழக்க தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் மாதாகோவிலை சுற்றியுள்ள அவருக்கு சொந்தமான இடத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதி நிரந்தரமாக மலேசியாவில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். நான் அரியலூர் மாவட்டத்தில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். நான் அரியலூர் மாவட்டத்தில் குடியிருந்து வருவதால் தாவா சொத்தில் நடக்கும் விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது மாமியார் மானம்பாடியில் வீடு கட்டி வருகிறார். 1 முதல் 3 பிரதிவாதிகள் யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. 4 ம் பிரதிவாதியை தெரியுமா என்றால் எனது அக்கா அன்னம்மாளின் பேரன் ஆவார்.

2. தெய்வசகாயகத்திற்கு 2 மனைவிகள் என்றால் சரியல்ல. ஒரு மனைவிதான். வாதி

எந்த கிளையில் தெய்வசகாயகத்திற்கு வாரிசு ஆவார் என்பது குறித்து தெரியுமா என்றால் வாதி 3 வது தலைமுறை வாரிசு ஆவார். வாதியின் தாத்தா பெயர் தெரியுமா என்றால் சவுரிமுத்து ஆகும். தெய்வசகாயகத்திற்கு 2 மனைவிகள் என்றாலும் 1 முதல் 3 பிரதிவாதிகள் மூத்த மனைவியின் வாரிசுகள் என்றாலும் சரியல்ல. சவுரிமுத்துவின் இறப்பு சான்று மற்றும் வாரிசு சான்றை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. தெய்வசகாயகத்திற்கு இறப்பு சான்று மற்றும் வாரிசு சான்றை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு விவரங்கள் எனது கணவர் சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான். தாவா சொத்துக்களின் சர்வே எண்கள் மற்றும் விஸ்தீரணம் தெரியு என்றால் தெரியாது. நிரூபண வாக்குமூலத்தை எனது கணவர் தட்டச்சு செய்து கொடுத்தார் என்றாலும் நான் அதில் கையொப்பம் செய்தேன் என்றாலும் சரியல்ல. நான்தான் வழக்கறிஞருக்கு விவரம் சொன்னேன். நான் தற்போது தேர் திருவிழா மற்றும் அன்னதானம் நடைபெறுவது சம்மந்தமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். எனது மகள் ஆரித்மேரி மலேசியாவில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். நான் வாதிக்கு நெருங்கிய உறவினர் என்றால் சரிதான். எனக்கு வழக்கு விவரங்கள் தெரியாது என்றாலும் வாதி எனக்கு நெருங்கிய உறவினர் என்பதால் அவருக்கு அனுசரணையாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வழக்கு சம்மந்தப்பட்ட ஆவணங்கள் எதையும் நான் பார்த்ததில்லை என்றால் சரிதான்.

**5 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

மேற்படி 1, 3 மற்றும் 4 ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

1. எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்தது என்றால் சரிதான். தாவா சொத்துக்களின் சர்வே எண்கள் விஸ்தீரணம் நான்கெல்லைகள் தெரியாது என்றால் சரிதான். எனது மகள் ஆரித்மேரி இவ்வழக்கில் சாட்சியம் அளித்துள்ளார் என்றால்

சரிதான். 5 முதல் 9 பிரதிவாதிகளுக்கு எதிராக இவ்வழக்கில் என்ன பரிகாரம் கோரப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் அது வாதிக்குதான் தெரியும். வாதி எனக்கு என்ன உறவுமுறை என்றால் சித்தப்பா பேரன் ஆவார். 1 முதல் 4 பிரதிவாதிகள் எனக்கு சொந்தமா என்றால் இல்லை. எனக்கு 1 முதல் 4 பிரதிவாதிகளிடம் பேச்சு வார்த்தையில்லை என்றால் சரிதான். வாதி எனக்கு நெருங்கிய உறவினர் என்பதால் அவருக்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2024.12.12 19:14:11 +0530

District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.